# பொதுக்காலத்தின் இருபத்துநான்காம் ஞாயிறு

மூன்றாவது திருவழிபாடு ஆண்டு

**இன்றைய வாசகங்கள்:**

**விப 32:7-11,13-14, 1திமோத் 1: 12-17, லூக்கா 15:1-32**

## திருப்பலி முன்னுரை:

கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்: உறுதிதரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை என்னுள்ளே உருவாக்கியருளும்.

ஆண்டவருக்குரியவர்களே, பொதுக்காலத்தின் இருபத்துநான்காம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். ஆண்டவரின் அன்பையும் பரிவையும் உணர்ந்தவர்களாய் பாவத்தில் இருந்து மனமாற்றம் அடைய இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. நாம் மனம் திரும்பும்போது, காணாமல் போன ஆட்டைக் கண்டு பிடித்த ஆயனாக ஆண்டவர் மகிழ்ச்சி அடைகிறார். தொலைத்த பணத்தைக் கண்டுபிடிப்பவரைப் போன்று, விண்ணுலகத் தூதரிடையே மகிழ்ச்சி ஏற்படும் என ஆண்டவர் எடுத்துரைக்கிறார். விண்ணகத் தந்தையின் அன்பை உணராதவர்களாய் அவரை விட்டு விலகிச் சென்ற தருணங்களுக்காக நாம் மன்னிப்பு வேண்டுவோம். மனமாற்றத்துடன் ஆண்டவரிடம் திரும்பிவர அருள் வேண்டி, இத்திருப்பலியில் பங்கேற்போம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. அன்புத் தந்தையே இறைவா!**

உமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் தங்கள் பணியின் மேன்மையை உணர்ந்தவராய், மக்களை மனமாற்றத்தின் பாதையில் அழைத்துச் செல்ல அருள்புரிய உம்மை மன்றாடுகிறோம்.

**2. என்றென்றும் பேரன்பை நிலையாகக் கொண்டுள்ள தந்தையே!**

பிரிவினைகளோடும், கசப்புணர்வுகளோடும், பழிவாங்கும் மனநிலையோடும், கண்ணீரோடும் வாழும் அனைவர்மீதும் மனமிரங்கி அவர்களின் உண்மையான மனமாற்றம் பெற்று, அனைவரோடும் ஒப்புரவாகி ஆதிக் கிறீஸ்தவ வாழ்வை வாழ்வதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**3. எமக்கு வலுவூட்டும் எம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை எமக்களித்த தந்தையே!**

கிறிஸ்துவை மாத்திரமே பின்பற்றி அவருடைய வார்த்தையால் உறுதியடைந்து உமக்கேற்றவர்களாக வாழுவதற்கு வேண்டிய அருளை எமக்களித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**4. அன்புத் தந்தையே இறைவா!**

பல்வேறு பாவச் சூழல்களில் உழன்று கொண்டிருக்கும் மக்கள் அனைவரும் உமது பேரன்பின் மேன்மையை உணர்ந்து மனந்திரும்பவும், தூய வாழ்வு வாழ்வதற்கான மன உறுதியைப் பெறவும் அருள்கூர்ந்திட உம்மை மன்றாடுகிறோம்.

**5. எம் நிறைவே இறைவா,**

எங்கள் நாட்டு மக்கள் அனைவரும் உமது இரக்கத்தையும் பொறுமையையும் உணர்ந்தவர்களாய் உம்மைத் தேடி வரவும், தங்கள் மனமாற்றத்தால் நீர் அளிக்கும் மீட்பைக் கண்டுணரவும் துணைபுரிய உம்மை மன்றாடுகிறோம்.